நிலை ஏற்படுகிறது. இப்படி அடையாள வில்லைகளைக் கொடுப்பதற்கான ஒரு நிகழ்ச்சி ஏற்பாடாகி இருக்கிறது என்றோ, அதற்கு காவல்துறை கண்காணிப்பு அல்லது அவர்களுடைய பாதுகாப்பு தேவை என்றோ அந்த நிர்வாகத்தினரால் போலீஸ் அதிகாரிகளுக்கு எந்தவிதமான தகவலும் அனுப்பப்படவில்லை. இந்தச் சம்பவம் நடந்த பிறகுதான், போலீஸ் அதிகாரிகளுக்குத் தகவல் தெரிந்து, உடனடியாக அந்த இடத்திற்கு விரைந்து சென்றிருக்கிறார்கள். நான் கோவையிலிருந்து திண்டுக்கல்லுக்கு வருகின்றபோது, பழனியிலே வருகிற நேரத்தில் இந்தச் சம்பவம் குறித்து எனக்குச் சொல்லப்பட்டது. உடனடியாக மாண்புமிகு அமைச்சர் திரு. ஓ. பி. இராமன் அவர்களை மதுரைக்கு விரைந்து செல்லுமாறு நான் வேண்டினேன். அவர்களும் அங்கு சென்று இறந்து விட்டவர்களுடைய குடும்பத்திற்கு ஆறுதல் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்ற அதிகாரிகளும் உடனடியாக அங்கே சென்றிருந்தார்கள். முதலமைச்சர் நிதியிலிருந்து மறைந்துவிட்ட குடும்பங்களுக்கு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டாயிரம் வரையிலே தருவது என்ற வகையிலே, 40 ஆயிரம் வரையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவம்பற்றி விசாரணை நடத்தி, அறிக்கை தருமாறு மதுரை கோட்டாட்சித் தலைவருக்கு மாவட்ட ஆட்சித் தலைவரும் ஆணையிட்டிருக்கிறார்கள். பொதுவாக இப்படிப்பட்ட சம்பவம் டிக்கெட்டு வாங்குகிற இடத்தில் நடக்கிறது என்று சொன்னார்கள். நமக்கு நாமே வகுத்துக் கொள்ளவேண்டிய ஒழுங்கு முறைக்கு விரோதமான காரியங்களால்தான் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறுகின்றன. எல்லோரும் பொறுமையாக இருந்து தங்களுக்குக் கிடைக்க வேண்டியவைகளைப் பெறுவதிலும் அல்லது காணவேண்டியவைகளைக் காண்பதிலும் பொறுமை காட்டுவார்களேயானால், இம்மாதிரியான அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தவிர்க்கலாம் என்பதை எடுத்துக்கூறி, மாண்டுவிட்டவர்களுடைய குடும்பத்தார்க்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே இதைவிட வேறு விளக்கம் வேண்டியதில்லை என்றும், ஒத்திவைக்கத் தேவை இல்லை என்றும், துணைத்தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முதலமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு எனது இசைவை மறுக்கிறேன்.

(பிற்பகல் 4-40)

4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1975)

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மேலவைத் துணைத் தலைவரவர்களே,

 தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி-உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1975

[திரு. ஓ.பி. இராமன்] [1975 அக்டோபர் 27

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள நிதி (திருத்த) சட்ட முன்வடிவு @(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

ஊராட்சிப் பகுதிகளில் உள்ள திரைப்பட அரங்குகள் இணக்க வரி செலுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட. இணக்க வரித் திட்டத்திற்கு எதிர் பார்த்த அளவிற்கு ஆதரவு கிடைக்கவில்லை. தகுதி பெற்ற 979 திரைப்பட அரங்குகளில், 268 திரைப்பட அரங்குகள் மட்டுமே இணக்க வரி முறையின் கீழ் வரி செலுத்த முன் வந்தன. இந்த 268 திரைப்பட அரங்குகளில்கூட 42 டூரிங் திரைப்பட அரங்குகள் இணக்க வரி செலுத்துவதற்கான தங்கள் இசைவை 1975 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து புதுப்பித்துக் கொள்ளவில்லை. இந்த இணக்க வரி முறையின் கீழ் வசூலான வரியும் ஊக்கமளிப்பதாயில்லை. இது தவிர இந்த இணக்க வரி முறையைச் செயற்படுத்துவதில் சில நிர்வாகச் சிக்கல்களும் இருந்தன. எனவே இந்த இணக்க வரித் திட்ட முறையை கைவிடத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கிணங்க தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு கேளிக்கை மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/1975) அதிகார முறைப்படி ஆளுநர் அவர்களால் வெளியிடப்பட்டது. இப்போது ஆய்விலுள்ள இச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனை இம் மேலவை ஏற்று, நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை முன் வடிவு எண் 44/1975) சட்ட பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு—எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

@ 234-236 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1975) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1975) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம். அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்கள் (பதவிக் கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1975).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்கள் (பதவிக் கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு, @(சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 45/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சி மன்ற உறுப்பினர்கள் (பதவிக் கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 45/1975) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தின் மூலம் நகராட்சிகளின் ஆயுட் காலமானது 1976 ஆம் ஆண்டு ஜூன்மாதம் 30 ஆம் தேதிவரை நீட்டிக்கப்படு கிறது. பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கான காரணங்கள் சொல்லப்

@ 236–237 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.